

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்திய சாய் நாதன் முன்னிலையில் நடைபெற்ற மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, நெல்லி, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளின் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் ப.தாயகம் கவி,ஜோசப் சாமுவேல், கே எஸ் ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தலைமைக் கழகச் சொற்பொழிவாளர் எழும்பூர் எம்.இ.தேவநிதி – டி.சந்தானலஷ்மி ஆகியோரின் புதல்வி டி.ரசிகா – ஆர்.ராஜராஜன் ஆகியோரின் மணவிழா வரவேற்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு புதுமண இணையரை வாழ்த்தினார்.ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி, நந்தீஸ்வரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

## மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல்: மேயர் பிரியா ராஜன் தலைமையில்

# சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி பிரச்சாரம்!

## கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வாக்கு சேகரித்தனர்!



மதுராந்தகம், செப்.23-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சரிதா மகேஷ் குமார், சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணிச் சார்பில் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் அண்டவாக்கம் 38 வது பாகம் அம்பேத்கர் நகர் வேடவாக்கம் பகுதியில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்த வாக்கு சேகரிப்பில் தாவூத்பீ, அமுதா, ஸ்ரீதனி, வரலட்சுமி, சந்திரகலா, கலைவாணி, அனிதா, கவிதா, ஜ"ஜ்ஜ" பிரியா, சாந்தி, தேவி, அனுசியா, குயின் அனிதா திரு.வி.க நகர் வடக்கு பகுதி புவனவதி, டி.சுமதிப்ரீத்தி, ராஜலஷ்மி, சகயாபாரதி, சிலோர் மணி, உஷா, சீமா, உஷா விஜயகுமார், திரு. வி.க. நகர் தெற்கு பகுதி சாந்தி மாசிலாமணி, ஈஸ்வரி கண்ணன், உமா, தனலஷ்மி, சத்தியா, விஜயா குமாரி

மற்றும் அப்பாகத்தின் பொறுப்பாளர்கள் மணி பால், நாகப்பன்,ஏகதாஸ்,நவீன் குமார், முனியம்மாள்,தில்சாத், ராஜகுமாரி, அஸ்வினி, யுவராணி. ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

# மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு வாக்கு சேகரிப்பு!



மதுராந்தகம்,செப்.23-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அவர்களின் ஆலோசனையின்படி நடந்த இவ்வாக்குச் சேகரிப்பில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு, மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட நல்லூர், நெமிலி, வாழப்பட்டு, இரும்பேடு, கீழ் ஜமீன்புதூர், மேல் ஜமீன்புதூர், சாலையூர், வேட்டூர், குருபாதமேடு, விளங்கனூர், கீழ்வசலை, மேல்வசலை, நீர்ப்பெயர், நீலமங்கலம், தொன்னாடு ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களிடம் இவ் வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது. அதுபோது, அவ்வூராட்சிகளைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தலைமை: க.இராஜேந்திரன்! டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் முன்னிலை!

# ‘மிசா’ குறித்து இழிவாகப் பேசிய முதல்வர் விஜய்க்கு கண்டனம்!

## பண்ருட்டி நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், செப்.23-

பண்ருட்டி நகர கழக செயற்குழு கூட்டம், 19.09. 2026, சனிக் கிழமை, காலை 11 மணியளவில்,பண்ருட்டி கும்பகோணம் சாலையில் உள்ள கே.எஸ்.ஆர்.சக்கரப்பாணி திருமண மண்டபத்தில், நகரமன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ். எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், நகர கழக அவைத் தலைவர் ஆர். ராஜா, பொருளாளர் ஆர். கே.இராமலிங்கம்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ப.குணசேகரன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணிச்சந்தர், மாவட்ட பிரதிநிதி ஆர். டி.ஆர்.பிரபு, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழகத்தில் உள்ள பொறுப்புகளை, விகிதாச்சாரத்தில் சில சீர்திருத்த செயல்முறைகளை வழங்கி உள்ளதால், அதனை நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்படுத்தி, மாவட்ட கழகத்திற்கும் தலைமை கழகத்திற்கும் முழு ஒத்துழைப்பு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு அனுபவித்த கொடுமைகளை கொச்சைப்படுத்தும் விதமாக சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் விஜய் அவர்களை, பண்ருட்டி நகர கழகம் சார்பில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர்கள் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற பண்ருட்டி நகர கழகம் சார்பில் தீவிரமாக தேர்தல் பணியாற்றுவோம் என தீர்மானிக்கப்பட்டது.

பண்ருட்டி நகர கழகத்தின் ஒற்றுமை மாறாமல் இருக்க, பண்ருட்டி நகரத்தை பிரிக்காமல் தற்போது உள்ளபடியே ஒரே நகர செயலாளர் என்கிற முறை தொடர வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கர் நவர துணை செயலாளர்கள் சசிகுமார். முன்னாள் மாவட்ட சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் சையத் காதர் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் துணை அமைப்பாளர் மகாலிங்கம். மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாரி. மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நாராயணன் நகர விவசாய அணி அமைப்பாளர் விஸ்வநாதன். நகர தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜாகிர் உசேன். நகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் தமிழ்ச்செல்வன். நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத். நகர மாணவரணி அமைப்பாளர் பார்த்திபன். நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பாலச்சந்தர் ராஜ் முஹம் மது.விக்கி. நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மோகன் நகர சமூக வலைதள பொறுப்பாளர் பாலாஜி உள்ளிட்ட வார்டு செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் முன்னாள் இன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் 2026 முன்னிட்டு, கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கருங்குழி பேரூர் பகுதியில் உள்ள 95 ஆம் பாகத்தில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திமுக ஆட்சியின் போது செய்த சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி வீடு வீடாகச் சென்று வாக்குசேகரித்தார் உடன் நிர்வாகிகள் கே. ஜெ.ரமேஷ், டி. தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், பா நரேஷ் குமார், விமல் வர்ஷன், பிரவீன் குமார், கருங்குழி காசிநாதன், கண்ணன், தேவி முரளி மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்.


